சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா. 01 திரு. தினகரன் த /பெ திரு. கிருஷ்ணன் , வயது . 33

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .–**

01.பொதுவாக மெகா லோக்அதாலத் க்கு நாங்கள் அழைப்பு விடுப்பது SBI வங்கியின் Chief மேனஜருக்கு தான் என்றால் சரிதான். அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு Chief மேனஜருக்கு தான் வட்ட சட்ட பணிகள் தலைவரை சந்திப்பார் என்றால் சரிதான். திருப்பத்துரை சுற்றி மொத்தம் 7 SBI கிளைகள் உள்ளது என்றால் சரிதான். 7 SBI கிளைகளுக்கும் Chief மேனஜர் தான் காசோலை கொடுப்பார் என்றால் சரிதான். பொதுவாக 7 SBI கிளை வங்கியை சேர்ந்தவர்கள் பிரசுரம் அச்சிட்டு எங்களிடம் கொடுத்து சீல் பெற்று தங்களின் பீல்டு ஆபீசர் மூலம் வினியோகம் செய்வார்கள் என்றால் சரிதான். சம்பவ சமயத்திலும் அதே போல் குறிசிலாப்பட்டு SBI வங்கியை சேர்ந்த பீல்டு ஆபீசர் என்னிடம் பிரசுரம் கொடுத்து சீல் பெற்று சென்றார் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்றோ அதற்கு முன்போ ஆஜர் எதிரி என்னிடம் கையொப்பங்கள் ஏதேனும் பெற்றாரா என்றாலும், என்னிடம் ஏதேனும் பேசினாரா என்றாலும் இல்லை. பீல்டு ஆபீசர் சண்முகம் என்பவர் தான் என்னை தொடர்பு கொண்டார் என்றாலும் ஒரு போதும் வங்கிமேளளரான ஆஜர் எதிரி தொடர்பு கொள்ளவில்லை என்றால் சரிதான். 05.07.2019 அன்று தான் ஆஜர் எதிரி பணிமாறுதல் பெற்று திருப்பத்தூருக்கு வந்தார் என்றாலும் பீல்டு ஆபீசர் தான் அதுவரை திருப்பத்தூர் கிளையில் இருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி என்னை தனிப்பட்ட முறையில்

அணுகி குரிசிலப்பட்டு கிளை சார்பாக தனிப்பட்ட முறையில் legial aid camp நடத்த வேண்டும் என்று கேட்டாரா என்றால் இல்லை. என் கையொப்பத்தை ஒளிநகல் எடுத்து பிரசுரம் செய்துவிட்டார்கள் என்று வட்ட சட்டபணிகள் ஆணைக்குழுவின் தலைவரிடம் நான் கூறும் போது பீல்டு ஆபீசர் தான் அவ்வாறு ஒளிநகல் எடுத்து பிரசுரம் செய்ததாக எதிரி முன்னிலையில் ஒப்புக்கொண்டார் என்றால் சரிதான். சம்பவ தினத்தில் நடந்த மெகா லோக்அதாலத்தில் ஆஜர் எதிரி கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். 15.07.2019 அன்று தான் ஆஜர் எதிரி கிளை மேளாளராக பணிக்கு சேர்ந்தார் என்றாலும் நான் புகார் அளித்த உடன் பீல்டு ஆப்பீசர் திரு. சண்முகம் என்பவர் தான் அவ்வாறு ஒளி நகல் எடுத்து பிரசுரம் செய்ததாக ஒப்புக்கொண்டார் என்றாலும் எதிரி லோக்அதாலத்தில் கலந்து கொள்ளவில்லை என்றாலும் அவருக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். ஜோதிபாசு என்பர் தான் கடன் பெற்ற நபர் என்றாலும், அவர் மக்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி பணத்தை முழுவதுமாக செலுத்திவிட்டார் என்றாலும், அவர் கொடுத்த தவறான புகாரை பெற்று இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் எனக்கு தெரியாது. சிவில் நீதிமன்றத்தில் மட்டுமே இந்த வழக்கு தொடர இயலும் என்றாலும் அவ்வாறு தொடர்ந்திருந்தாலும் பீல்டு ஆபீசர் திரு. சண்மும் என்பவர் மீது தான் தொடுத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

//**உண்மை நகல்**//

KODHAVADI
SUBRAMANIAN
DINESH

Judicial Magistrate No.I
Tirupattur
Digitally signed by
KODHAVADI
SUBRAMANIAN
DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**